# கர்த்தரைத் துதிப்போம்!



தொகுப்பு: வாட்சன் குட்மேன்

இலவசம் விற்கக் கூடாது.

# கர்த்தரைத் துதிப்போம்!

ஒவ்வொரு நாளும் 15 நிமிடங்கள் தேவனைத் துதிக்கும் படியாக கர்த்தர் என்னை உணர்த்தினார். நான் அப்படிச் செய்தபொழுது மகிழ்ச்சியும், வெற்றியுமுள்ள கிறிஸ்தவனாக அது என்னை மாற்றியது.

தயவு செய்து மேலோட்டமாக இப்பிரதியைப் படிக்க வேண்டாம். ஜீவனுள்ள, அற்புதமான நம்முடைய தேவனை உள்ளத்தின் ஆழத்திலிருந்து துதிக்க, ஒரு வழிகாட்டியாக உபயோகியுங்கள். இப்பிரதியிலுள்ள வசனங்களில் ஒரு பகுதியைத் தெரிந்துகொண்டு, ஒவ்வொருநாள் காலையிலும் தேவனுக்கு முன்பாகத் துதி செலுத்துங்கள். உங்கள் ஸ்தோத்திரம் ஜீவனுள்ளதாகவும், தொடர்ச்சியாகவும் இருக்கட்டும்.

உலகெங்குமுள்ள துதி செலுத்துவாரோடு இணையுங்கள்.

- வாட்சன் குட்மேன்

All scriptures are taken from the Tamil Bible with permission from the Bible Society of India.

## ஆனந்தக் களிப்போடு கர்த்தரைத் துதியுங்கள். 1

நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள். சங்கீதம் 32:11

கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று. சீஷர்கள் சந்தோஷத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள். அப் 13:49, 52

அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாய் இருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படும்.

அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து. 1பேதுரு 1:7,8

## இருதயத்திலிருந்து தேவனைத் துதியுங்கள்.

நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக. உபா 6:5

கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன். உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன். சங்கீதம் 9:1

உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன், தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும், உமது உண்மையினிமித்தமும், உமது நாமத்தைத் துதிப்பேன். உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர். சங்கீதம் 138:1,2

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி. சங்கீதம். 103:1

இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர். சங்கீதம் 22:3

*மகிழ்ச்சியாயிருந்து கனிகொடுக்க தேவனுடைய சமுகத்தில் துதித்துக் கொண்டிருங்கள்.*

தேவனே, சீயோனிலே உமக்காகத் துதியானது அமைந்து காத்திருக்கிறது. சங்கீதம் 65:1a

கர்த்தரைக் கெம்பீரமாய்ப்பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள். துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம். சங்கீதம் 95;1,2

*துதியுங்கள், ஆசீர்வாதம் தொடரும்.*

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. சங்கீதம் 67:5,6

4 பரலோகம் துதியினால் நிறைந்திருக்கிறது.

அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்; உன்னதங்களில் அவரைத் துதியுங்கள்.

அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்.

சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள்: பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள்.

வானாதி வானங்களே, அவரைத்துதியுங்கள்; ஆகாய மண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள்.

அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது.

அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார்; மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார். சங் 148:1-6

தேவனைத் துதிக்கும் குழுவோடு சேர ஒவ்வொருவரும் 5 அழைக்கப்படுகிறார்கள்.

சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்; நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்.

தேவன் பூமியனைத்திற்கும் ராஜா. சங் 47:1,6, 7a

பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

பூமியின் மீதெங்கும் உம்மைப் பணிந்து கொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள்; அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள். சங்கீதம் 66:1,4

தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்; ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள். சங்கீதம் 67:4

மனப்பூர்வமாய்க்கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப் பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான்.

ஆகையால் தாவீது சபை அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்திச் சொன்னது; எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. 1நாளா 29:9-13

பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக் கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். ஏசாயா6:3b

கர்த்தாவே, நீரே என் தேவன்; உம்மை உயர்த்தி, உமது நாமத்தைத் துதிப்பேன்; நீர் அதிசயமானவைகளைச் செய்தீர்; உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும், உறுதி யுமானவைகள். ஏசாயா 25:1

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும் வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும், குற்ற மில்லாமலும் கைக்கொள்ளும்படிக்கு,

எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனு டைய சந்நிதானத்திலேயும், பொந்தியுபிலாத்துவின் முன் னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.

அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங் களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்

ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராத வரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக, ஆமென்.

*1 தீமோ 6:13-16*

சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள் மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது,

இருபத்து நான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து:

கர்த்தாவே, தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.
வெளி 4:9 - 11

## ஆராய்ந்து முடியாத அவருடைய மகத்துவத்திற்காக துதியுங்கள். 

கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.

தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச்சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்.

உம்முடைய சிறந்த மகிமைப் பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையுங் குறித்துப் பேசுவேன்.

ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள்; உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன்.

அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்.

கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர். சங்கீதம் *145:3-8*

## 10 அவருடைய சிங்காசனத்திற்காகவும், வல்லமைக்காகவும் துதியுங்கள்

தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. சங்கீதம் 45:6

கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; வானம் எனக்கு சிங்காசனம், பூமி எனக்குப் பாதப்படி; ஏசாயா66:1a

நான் உங்களுக்குச்சொல்லுகிறேன். பரிச்சேதம் சத்தியம், பண்ணவேண்டாம், வானத்தின் பேரில் சத்தியம் பண்ணவேண்டாம்.அது தேவனுடைய சிங்காசனம். மத்தேயு 5:34

கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபிக்கிறார். அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்தரியுங்கள். சங்கீதம் 103:19,20

மலேயின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப் போல் இருந்தது. யாத் 24:17

இஸ்ரவேலின் தேவனுயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; அவரே அதிசயங்களைச் செய்கிறவர்.

அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக; பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென். சங்கீதம் 72:18,19

கர்த்தரின் பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, நீ கன்மலையில் ஒதுங்கி, மண்ணில் ஒளித்துக் கொள்.

நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீருப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார். ஏசாயா 2:10,11

**12 அவருடைய வெற்றிக்காகத் துதியுங்கள். கிறிஸ்துவுக்குள் இருப்போர் என்றென்றைக்கும் ஜீவிப்பர்.**

மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம். 1கொரிந்தியர் 15:21-26

யேகோவா என்னும் நாமத்தையுடைய தேவரீர் ஒருவரே பூமியனைத்தின் மேலும் உன்னதமானவர் என்று மனுஷர் உணரும்படி. சங்கீதம் 83:17

கர்த்தர் கொல்லுகிறவரும், உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்; அவரே பாதாளத்தில் இறங்கவும், அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர்.

கர்த்தர் தரித்திரம் அடையச் செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர்.

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்;அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்தருடையவைகள். அவரே அவைகளின் மேல் பூச்சகரத்தை வைத்தார். 1சாமுவேல் 2:6-8

**14 நம்முடைய பெரிதான கர்த்தர் உயர்த்தப்பட்டிருக்கிறார்.**

நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். சங்கீதம் 46:10

கர்த்தர் எல்லா ஜாதிகள் மேலும் உயர்ந்தவர், அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது. சங் 113:4

கர்த்தாவே, உம்முடைய பலத்திலே நீர் எழுந்தருளும்; அப்பொழுது உம்முடைய வல்லமையைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுவோம். சங்கீதம் 21:13

நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி, அவர் பாதப்படியிலேபணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர். சங் 99:5

கர்த்தர் உயர்ந்தவர், அவர் உன்னதத்தில் வாசமாயிருக்கிறார்; அவர் சீயோனை நியாயத்தினாலும் நீதியினாலும் நிரப்புகிறார். ஏசாயா 33:5

தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும். உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக. சங் 57:11

அவருடைய அளவில்லா சுதந்தரங்களுக்காகத் துதியுங்கள். 

இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானல், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப் பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. யாத் *19:5*

தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங் களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசிகளும், என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள். லேவி *25:23*

கர்த்தாவே, மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.

எல்லாம் உம்மாலே உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக்கொடுத்தோம். *1*நாளா **29:11,14b**

அவர் கர்த்தரானபடியால் அவரைத் துதியுங்கள்.

நீர் ஒருவரே கர்த்தர். நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவைகளையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வான சேனைகள் உம்மைப் பணிந்து கொள்கிறது. நெகேமியா 9:6

என் தேவனாகிய ஆண்டவரே, உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன். சங்கீதம் 86:12

## *இயேசு கிறிஸ்துவே கர்த்தர்*

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். 1கொரி 8:6

ஸ்தோத்திரபலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்; தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்குத் தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று சொல்லுகிறார். சங்கீதம் 50:23

தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். சங்கீதம் 69:30

நீர் என் தேவன், நான் உம்மைத்துதிப்பேன்; நீர் என் தேவன், நான் உம்மை உயர்த்துவேன். சங்கீதம் 118:28

## *கிறிஸ்தவர்கள் ஸ்தோத்திரத்தில் ஒருமனப்பட வேண்டும்.*

**18** அவருடைய மகிமையையும், மகத்துவத்தையும் விவரியுங்கள்.

ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.

கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்தரிக்கப்படத் தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத் தக்கவர் அவரே. சங்கீதம் 96:3,4

தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்;உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக. சங் 57:5

அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள். சங்கீதம் 66:2

நீதிமான்களே, கர்த்தருக்குள் களிகூருங்கள்; துதி செய்வது செம்மையானவர்களுக்குத் தகும். சங்கீதம் 33:1

உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவருடைய அனந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,

இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டுஎல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே, ஆதிகாலம் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக்காண்பிக்கிறதற்கு இந்தக்கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எபேசியர் *3:10,11*

கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, எபேசியர் *1:11*

அசீரியனை என் தேசத்திலே முறித்து, என் மலைகளின் மேல் அவனை மிதித்துப்போடுவேன்; அப்பொழுது அவனுடைய நுகம் அவர்கள் மேலிருந்து விலகி, அவனுடைய சுமை அவர்கள் தோளிலிருந்து நீங்கும். ஏசாயா *14:25*

உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும், நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். சங்கீதம் 8:3,4

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது; ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ் செய்த உம்முடைய அதிசயங்களும், உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது. ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லி முடியாது; நான் அவைகளைச் சொல்லி அறிவிக்க வேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள். சங்கீதம் 40:5

## அவரைத் துதியுங்கள்

### அவருடைய சித்தத்திற்காய்

மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். எபேசியர் 6:6

ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும். யாக்கோபு 4:15

அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ, அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ நான் சுயமாய் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான். யோவான் 7:17a

### அவருடைய பெரிதான வழிகளுக்காய்

தேவனுடைய வழி உத்தமமானது. சங்கீதம் 18:30a

## 22 சர்வ வல்லமையுள்ள அவருடைய நாமத்திற்காய் துதியுங்கள்

கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய பிராகாரங்களில் பிரவேசியுங்கள்.

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்; பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள். சங்கீதம் 96:8,9

அக்காலத்திலே நீங்கள் சொல்லுவது; கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நாமத்தைத் தொழுது கொள்ளுங்கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள் அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம் பண்ணுங்கள். ஏசாயா 12:4

தேவனே, உமது நாமம் விளங்குகிறதுபோல, உமது புகழ்ச்சியும், பூமியின் கடையாந்தரங்கள் பரியந்தமும், விளங்குகிறது. உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது. சங்கீதம் 48:10

## சர்வவல்லமையுள்ள அவருடைய நாமத்திற்காய்த் துதியுங்கள்

கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்று, கர்த்தருடைய நாமத்தைக் கூறினர். யாத் 34:5

கர்த்தரை நோக்கி; எந்த ஸ்துதி ஸ்தோத்திரத்துக்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. நெகேமியா 9:5a

அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது.

அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது. சங் 148:5,13

உற்சாகத்துடன் நான் உமக்குப் பலியிடுவேன்; கர்த்தாவே, உமது நாமத்தைத் துதிப்பேன்; அது நலமானது. சங்கீதம் 54:6

## 24 சர்வ வல்லமையுடைய அவருடைய நாமத்திற்காய்த் துதியுங்கள்.

நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணு வேன். சங்கீதம் 7:17

இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். மத்தேயு 1:23

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! சங்கீதம் 8:9

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி. பிலிப்பியர் 2:9

இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக் கடவது. சங்கீதம் 113:2

# கிறிஸ்துவின் சில பெயர்களும், நாமங்களும். அவருடைய ஒப்பற்ற வல்லமை.

அல்பாவும், ஒமேகாவும் - சர்வ வல்லமையுள்ளவர். வெளி 1:8
நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதி. 1 தீமோ 6:15
கிறிஸ்துவே இரட்சகர். லூக்கா 2:11
கிறிஸ்துவே தேவவல்லமையும், தேவஞானமும். 1 கொரி 1:24
இம்மானுவேல். (தேவன் நம்மோடிருக்கிருர்). மத்தேயு 1:23
தேவன். யோவான் 1:1, சர்வலோகாதிபதி. ஏசாயா 54:5
பிரபு. மத்தேயு 2:6, இருக்கிறவர். யோவான் 8:58
சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும் தலைவர். கொலோசெயர் 2:10
உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவன். அப்போஸ்தலர் 10:42
மகிமையின் ராஜா. சங்கீதம் 24:7-10
ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர். வெளி 19:16
வானத்திலிருந்து வந்த கர்த்தர். 1 கொரி 15:47

## உலகத்திற்கு அவர் யாரெனில்

ஆத்துமாக்களின் கண்காணி. 1 பேதுரு 2:25
சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர். ஆகாய் 2:7
பாவிகளின் சிநேகிதன். மத்தேயு 11:19
உண்மையுள்ள சாட்சி. வெளி 1:5
பூமியெங்கும் ராஜா. சகரியா 14:9
எல்லாருக்கும் கர்த்தர். அப்போஸ்தலர் 10:36
பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி. வெளி 1:5
எல்லோரையும் மீட்கும் பொருள். 1 தீமோத்தேயு 2:6
நீதியுள்ள நியாயாதிபதி. 11 தீமோத்தேயு 4:8
உலக இரட்சகர். யோவான் 4:42
மனுஷகுமாரன். மத்தேயு 8:20
தள்ளின மூலைக்கல். மத்தேயு 21:42

## இரட்சகர்

நித்திய இரட்சிப்பின் காரணர். எபிரேயர் 5:9

## விசுவாசிகளுக்கு அவர் யாரெனில்

விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவரும். எபி 12:2
முற்றிலும் அழகுள்ளவர். உன்னதப்பாட்டு 5:16
பரிந்து பேசுகிறவர். 1 யோவான் 2:1
வானத்திலிருந்து இறங்கின அப்பம். யோவான் 6:51
ஜீவ அப்பம். யோவான் 6:48
நீதியின் கிளை. எரேமியா 33:15
மணவாளர். மத்தேயு 9:15
மூலைக்கல். எபேசியர் 2:20
பிரதான மேய்ப்பர். 1 பேதுரு 5:4
தேவனுடைய கிறிஸ்து. லூக்கா 9:20
ஆடுகளின் வாசல். யோவான் 10:7,9
நித்திய ஜீவன். 1 யோவான் 5:20
தேவனும், இரட்சகருமான இயேசு கிறிஸ்து. 11 பேதுரு 1:1
பிரதான ஆசாரியன். எபிரேயர் 3:1

## தேவனுல் கொடுக்கப்பட்டவைகள்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினுல் அருளப் பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனுகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனுகவும் இருக் கும்படியாக. 11 தீமோத்தேயு 3:16

## விசுவாசிக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறது.

குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனுயிருக்கிருன்; குமாரனை விசுவாசியாதவனே ஜீவ னைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றுன். யோவான் 3:36

உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறி யவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாச மாயிருக்கவும், தேவ குமாரனுடைய நாமத்தின்மேல் விசு வாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன். 1 யோவான் 5:13

## அவை மிகவும் புடமிடப்பட்டவை.

தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். நீதிமொழிகள் 30:5

கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. சங்கீதம் 12:6

## அது பூரணமானது

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. சங் 19:7

## நமக்குவெளிச்சம்

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங்கீதம் 119:105

## திட்டமான நோக்கம் கொண்டது

தேவவசனத்தினுல் உண்டாகும் பொறுமையினுலும், ஆறுதலினுலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. ரோமர் 15:4

## தேவ மக்களால் விரும்பப்படுவது

உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது. உமது அடியேன் அதில் பிரியப்படுகிறேன். சங்கீதம் 119:140

## ஆயுதம்

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களை யும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக் கிறதாயும் இருக்கிறது. எபிரேயர் 4:12

## கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின் இரத்தம்.

என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன். யோவான் 6:54

இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப் படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்த மாயிருக்கிறது. மத்தேயு 26:28

போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத் திரத்தையும் எடுத்து; இந்தப்பாத்திரம் என் இரத்தத்தினு லாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். 1 கொரிந்தியர் 11:25

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத் தினாலும். வெளிப்படுத்தல் 12:11

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!
## எனக்காக என் தேவன் மரித்தார்

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். *1 யோவான் 3:16*

### *அவரே உயிர்த்தெழுந்த சர்வவல்லமையுள்ள தேவன்.*

இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். *யோவான் 11:25*

### *அவரே என்னுடைய இரட்சிப்பைச் சம்பாதித்தார்*

ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். *அப்போஸ்தலர் 20:28*

## பாவத்திலிருந்து இரட்சிப்பைத் தந்ததற்காக

அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. *1 யோவான் 3:5*

## *அழிவிலிருந்து மீட்டமைக்காக*

அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும், அதின் சொருபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது. வெளிப்படுத்தல் 14:11

## *மெய்யான நித்திய இரட்சிப்பிற்காக*

நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. *யோவான் 10:28*

## 34 கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மனந்திரும்ப அழைத்ததற்காய்

இயேசு அதைக்கேட்டு, பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். மாற்கு 2:17

## *இயேசுவின் மூலம் விசுவாசத்தால் உண்டாகும் இரட்சிப்பிற்காய்*

அதற்கு அவர்கள்; கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி. அப்போஸ்தலர் 16:31

## *இரட்சிப்பின் ஒரே வழிக்காக*

இயேசு அவனுக்கு பிரதியுத்திரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக்காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். யோவான் 3:3

நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது. *1 யோவான் 1:3*

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டுக் கதவைத்திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். *வெளி 3:20*

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். *சங்கீதம் 145:18*

ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். *மத்தேயு 18:20*

 கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தரை அதிகமாய்த் துதியுங்கள். அவருடைய நீதி இரட்சிப்பிற்காக

நானோ எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்து, மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.
என்வாய் நாள்தோறும் உமது நீதியையும், உமது இரட்சிப்பையும் சொல்லும், அவைகளின் தொகையை நான் அறியேன்.
தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது; பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்? சங்கீதம் 71:14, 15, 19

## ஜெயங்கொடுக்கிற இயேசுவினால் சமாதானம்.

என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். யோவான் 16:33

கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னை இரட்சியும்; அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; தேவரீரே என் துதி. எரேமியா 17:14

## *அவரே என் நித்திய நம்பிக்கை*

நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. தீத்து 2:13

## *அவராலே நீதியின் கனிகள்*

நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன். பிலிப்பியர் 1:11

கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக, விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. *1 பேதுரு 1:5,6*

அவருடைய நாமத்துக்காக தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய். *அப்போஸ்தலர் 5:41*

துக்கப்பட்டவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். *II கொரி 6:10*

துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல் ஆவியினால் நிறைந்து, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து; எபே 5:18,20

வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச்செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். கொலோசெயர் 3:17

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். பிலிப்பியர் 4:6

நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய். சங்கீதம் 50:14,15

## அவருடைய இலவசமானதும், அளவில்லாததும். மிகப்பெரியதும், மகிமையுமான கிருபைக்காக.

இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ரோமர் 3:24

### *பாவத்திலிருந்து விடுவித்ததற்காய்*

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. எபேசியர் 1:7

### *மரணத்திலிருந்து விடுவித்ததற்காய்*

ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது. ரோமர் 5:21

இந்த விதமான ஐக்கியங்களுக்காக 

கர்த்தரைத் துதியுங்கள்.

சர்வ வல்லமையுள்ள தேவனின் சிநேகிதர்கள் நாம்.

நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள். யோவான் 15:14

## நாம் தேவனுடைய குமாரர்கள்

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். ரோமர் 8:14

## நாம் தேவனுடைய ஊழியர்கள்

தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது: யாக்கோபு 1:1

மகாசபையிலே உம்மைத் துதிப்பேன். திரளான ஜனங்களுக்குள்ளே உம்மைப் புகழுவேன். சங்கீதம் 35:18

அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஜனங்களின் சபையிலே அவரை உயர்த்தி, மூப்பர்களின் சங்கத்திலே அவரைப் போற்றுவார்களாக. சங்கீதம் 107:31,32

உங்கள் கைகளை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். சங்கீதம் 134:2

ஆகாய மண்டலத்தில் கர்த்தருக்கு நிகரானவர் யார்? பலவான்களின் புத்திரரில் கர்த்தருக்கு ஒப்பானவர் யார்? தேவன் பரிசுத்தவான்களுடைய ஆலோசனைச் சபையில் மிகவும் பயப்படத்தக்கவர். தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத்தக்கவர். சங்கீதம் 89:6,7

நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்; அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள். சங்கீதம் 40:3

கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன். சங்கீதம் 13:6

சீயோனிலே வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணி, அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள். சங்கீதம் 9:11

பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள். சங் 100:1,2

நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப் 16:25

கர்த்தர் பெரியவர். அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத் தக்கவர். சங்கீதம் 48:1

சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி. இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறுர்; அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும், கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறுர். சகரியா 9:9.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக; சங்கீதம் 67:3

ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகப் பணிந்து; உமது நாமத்தை மகிமைப் படுத்துவார்கள்.

தேவரீர் மகத்துவமுள்ளவரும், அதிசயங்களைச் செய்கிற வருமாயிருக்கிறீர்; நீர் ஒருவரே தேவன். சங்கீதம் 86:9,10

அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி; அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார். உபாகமம் 33:27

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலை மாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப்பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம். ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார். அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார். ஜாதிகள் கொந்தளித்தது. ராஜ்யங்கள் தத்தளித்தது. அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார்; பூமி உருகிப்போயிற்று. சங்கீதம் 46:1-6

## கிறிஸ்துவை என்றும் துதிப்பதற்காகவே தெரிந்தெடுக்கப்பட்டோம்.

### சபை கிறிஸ்துவை என்றென்றைக்கும் மகிமைப் படுத்தும்.

சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும், சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். எபேசியர் 3:21

தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக! ஆமென். யூதா 1:25

### அவரை மகிமைப்படுத்த தம்மைத் தெரிந்துகொண்டார்

நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன். பிலிப்பியர் 1:11

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். சங்கீதம் 34:1

அப்பொழுது, உம்முடைய ஜனங்களும், உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் உம்மை என்றென்றைக்கும் புகழுவோம்; தலைமுறை தலைமுறையாக உமது துதியைச் சொல்லி வருவோம். சங்கீதம் 79:13

அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள் இருந்தவரும், இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர், பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. வெளி 4:8

நாமோ, இது முதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். அல்லேலூயா. சங்கீதம் 115:18

பின்னும், அவன் என்னை நோக்கி; ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும், இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான்.

அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி; இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும், இயேசுவைக் குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள்; இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான். பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்:

இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது. அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.

*வெளிப்படுத்தல் 19:9-11*

## துதிப்பதனுல் ஆவிக்குரிய வல்லமையடைகிறோம்.

துதித்ததினுல் கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று. (1 நாளாகமம் 5:13, 14) யுத்தத்திற்கு முன்னே கர்த்தரைத் துதித்தபடியினுல் பெரிய ஜெயம் கிடைத்தது. (11 நாளாகமம் 20:1-24) இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர். (சங் 22:3) தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் துதிகளின் மத்தியில் வாசஞ்செய்கிருர். உண்மையாகவே தேவனேத் துதிக்கும் மனிதனின் இருதயத்தில் தேவன் வாசம் செய்வதினுல் அவன் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறுவான். துதி ஒன்றே ஒருவனுடைய வாழ்க்கையில் தேவனுடைய பிரசன்னத்தையும், வல்லமையையும் பெற நிச்சயமான வழி ஆகும். எவ்வளவு வாஞ்சையாய் தேவனேத் துதிப்பீர்களோ, அவ்வளவாய் ஆவிக்குரிய பெலனே அடைவீர்கள்.

வாட்சன் குட்மேன்

Read booklets online or by App
www.wmp-readonline.org

**FREE — not to be sold**

www.wmpress.org

5-21

1206 Tamil PTL